DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 296/2024**

**CoDeposition of LW1 examined as PW1** Dt. 27.10.2025

| | |
|---|---|
| Name | சுபாஷ்கௌதம் |
| Father's Name | ராமசாமி |
| Village | கொரநாடு |
| Taluk | மயிலாடுதுறை |
| Age | 31/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 27.10.2025

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து ரயில்வே துறையில் டிக்கெட் பரிசோதகராக பணிபுரிந்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2023 ம் ஆண்டு ஒரு நாள் இரவு 9.30 மணியளவில் மயிலாடுதுறையில் ரயில் நிலையத்திற்கு திருவாரூர் to மயிலாடுதுறை Passenger ரயில் வந்தது. அதில் பயணம் செய்து வந்த பயணிகளின் டிக்கெட்டை பரிசோதனை செய்து கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத நபர் டிக்கெட்டை காண்பிக்காமல் என்னிடம் தகராறு செய்து தகாத வார்த்தைகளில் திட்டி என்னுடைய சீருடை சட்டையை கிழித்தும் தள்ளு முள்ளும் செய்தார். இரவு நேரம் என்பதாலும் கூட்டமாக இருந்ததாலும் அவர் யார் என்று எனக்கு அடையாளம் தெரியவில்லை. ஆஜர் எதிரி சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் அங்கு இல்லை. எதிரி மீது இருந்த சந்தேகத்தின் காரணமாக தவறுதலாக எதிரி மீது புகார்மனு கொடுத்துவிட்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

ஆஜரில் உள்ள எதிரியை எனக்கு தெரியாது. புகாரை யார் எழுதியது என்றால் உடன் பணிபுரிந்த பயணசீட்டு பரிசோதகர் எழுதினார். அதில் உள்ள சங்கதி பற்றி எனக்கு தெரியாது. எதிரியுடன் நான் சமாதானமாகிவிட்டேன் என்றால் சரிதான். சமாதனா மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 24.11.2023 ம் தேதி இரவு 9.20 மணியளவில்

மயிலாடுதறையில் ரயிலில் இருந்து வந்து இறங்கிய பயணிகளிடம் பயணசீட்டை பரிசோதனை செய்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரி டிக்கெட்டை காண்பிக்காமல் தகாத வார்த்தைகளில் திட்டியதாகவும், அவரை கேட்ட போது என்னுடைய சீருடை சட்டையை கிழித்து, என்னிடம் தள்ளுமுள்ளில் ஈடுபட்டுபட்டதாக எதிரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி போலீசாரிடம் புகார்மனு கொடுத்துவிட்டு, தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

27/10/25

நீதித்துறை

மயிலாடு